ஸ்டாலினுக்கு உடல்நலக் குறைவு: திமுக முப்பெரும் விழா ஒத்திவைப்பு

சென்னை, செப். 15: திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதால், செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவிருந்த அக்கட்சியின் முப்பெரும் விழா ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திமுக பொதுச் செயலர் துரைமுருகன் வெளியிட்ட அறிக்கை: சென்னையில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் முப்பெரும் விழா செவ்வாய்க்கிழமை மாலை (செப். 15) நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு திடீர் காய்ச்சல் பாதிப்பு காரணமாக முப்பெரும் விழா ஒத்திவைக்கப்படுகிறது. முப்பெரும் விழா நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

திமுக தொடங்கப்பட்ட நாள், திமுக நிறுவனர் அண்ணா பிறந்த நாள், பெரியார் பிறந்த நாள் விழா ஆகியவற்றை முப்பெரும் விழாவாக ஆண்டுதோறும் திமுக கொண்டாடுகிறது. இதன் தொடர்ச்சியாக, ஆண்டுதோறும் திமுக சார்பில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, மு.க.ஸ்டாலின் விருது வழங்கப்பட்டு வருகிறது.

உவேசா நூலகம் தமிழின் வரலாற்றுப் பெட்டகம்

நிர்மலா சீதாராமன் புகழாரம்

சென்னை பெசன்ட் நகரில் உள்ள டாக்டர் உவேசா நூலகத்தில் உள்ள அரிய ஓலைச் சுவடிகளை செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். உடன் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், எழுத்தாளர் மாலன், விஜடி வேந்தரும் நூலகத்தின் தலைவருமான கோ.விசுவநாதன், துணைத் தலைவர் சிவாலயம் ஜெ.மோகன் உள்ளிட்டோர்.

சென்னை, செப். 15: உவேசா நூலகம் தமிழ் மொழியின் அரிய ஓலைச் சுவடிகள், பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாக்கும் அறிவுப் பெட்டகமாக விளங்குகிறது என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் புகழாரம் சூட்டினார்.

சென்னை பெசன்ட் நகரில் உள்ள டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகத்துக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செவ்வாய்க்கிழமை வருகை தந்தார். இதையடுத்து, அங்கு வைக்கப்பட்டிருந்த உவேசா பதிப்பித்த நூல்கள், ஓலைச்சுவடிகள், உவேசா கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள், நாட்குறிப்புகள், உவேசா சேகரித்த ஆவணங்களை ஆர்வத்துடன் பார்வையிட்டார். தொடர்ந்து, அந்த நூலகத்தில் தற்போது பதிப்பிக்கப்பட்டு வரும் பழந்தமிழ் நூல்கள் குறித்து நூலக நிர்வாகிகளிடம் கேட்டறிந்தார். பின்னர், உவேசா நூலக நிர்வாகிகளுடன் அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துரையாடியார்.

அப்போது, சங்ககால இலக்கியங்கள், அரிய ஓலைச் சுவடிகள் பலவற்றைப் பாதுகாக்கும் வரலாற்றுப் பெட்டகமாக உவேசா நூலகம் விளங்குகிறது. அறியப்படாத பல தமிழ் நூல்களை மீட்பதற்காக உவேசா ஆற்றிய பணிகள் அளப்பரியவை. சிலப்பதிகாரத்தில் வரும் சதுக்க பூதம் உள்பட தமிழ் இலக்கியங்களில் உள்ள பல அரிய தகவல்கள் வெளிப்பட காரணமாக இருந்தவர் அவர். உவேசா படைப்புகள், திரட்டிய ஆவணங்கள், பதிப்பித்த நூல்கள் தொடர்பான தகவல்களை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டும்.

உவேசாவின் உதயணன் சரித்திரச் சுருக்கம், உதயணன் குமார காவியம், சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் ஆகிய படைப்புகளைத் தேடிக் கொண்டிருந்தேன். அந்த நூல்கள் தற்போது இங்கு கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் நூலில், சங்க கால நூல்களில் கூறப்படும் தெய்வங்கள், புலமை வாய்ந்த பெண்பாற் புலவர்கள் எனப் பல அரிய தகவல்கள் உள்ளன. அந்த நூலில் உள்ள ஒவ்வொரு தகவலும் வியப்பூட்டுகிறது என்றார் அவர்.

இந்த நிகழ்வின்போது, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக பாஜக மாநில பிரிவு அமைப்பாளர் கே.டி.ராகவன், உவேசா நூலகத்தின் தலைவரும் விஜடி வேந்தருமான கோ.விசுவநாதன், செயலர் டி.சத்தியமூர்த்தி, துணைத் தலைவர் சிவாலயம் ஜெ.மோகன், காப்பாட்சியர் பெ.சுயம்பு, எழுத்தாளர் மாலன், வழக்குரைஞர் கே.எஸ். ராதாகிருஷ்ணன், புலவர் கோ.உத்திராடம், நூலக அலுவலகப் பொறுப்பாளர் வி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முதல்வர் குறித்து அவதூறு பேச்சு: ஆ.ராசா, சேகர்பாபு மீது வழக்குப் பதிவு

சென்னை, செப். 15: தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் குறித்து அவதூறாகப் பேசியதாக ஆ.ராசா எம்.பி., முன்னாள் அமைச்சரும் எம்எல்ஏவுமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் மீது சென்னை போலீஸார் திங்கள்கிழமை வழக்குப் பதிவு செய்தனர்.

அண்மையில் நடந்து முடிந்த சட்டப்பேரவை கூட்டத் தொடரின் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது முதல்வர் விஜய் பதில் அளித்துப் பேசியபோது, திமுக குறித்தும், மறைந்த அந்தக் கட்சித் தலைவர்கள் குறித்தும் குறித்தும் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். குறிப்பாக சர்க்காரியா கமிஷன் அறிக்கை, வீராணம் திட்டம், அமலாக்கத் துறை ஆவணங்கள் ஆகியவை குறித்துப் பேசினார்.

திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்களை அவமதிக்கும் வகையில் பேசியதாக முதல்வர் விஜய்யை கண்டித்து திமுக சார்பில் தமிழகம் முழுவதும் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சைதாப்பேட்டையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் திமுக எம்.பி.யும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஆ.ராசா பங்கேற்றுப் பேசினார். அப்போது அவர் முதல்வர் விஜய் குறித்து அவதூறாக, சர்ச்சைக்குரிய வகையில் விமர்சித்ததாக தவெக நிர்வாகி கார்த்திக், சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அந்தப் புகாரின் அடிப்படையில், வன்முறையைத் தூண்டும் வகையில் பேசுதல், பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் உள்பட ஏழு பிரிவுகளின் கீழ் ஆ.ராசா மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பி.கே. சேகர்பாபு பங்கேற்றுப் பேசினார். அப்போது அவர் முதல்வர் விஜய்யை ஒருமையில் பேசி, கடுமையாக விமர்சித்ததாக சமூக நலத் துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி, சென்னை வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் 6 பிரிவுகளின் கீழ் சேகர்பாபு மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

ஏற்கெனவே, காவல் துறையின் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக இரு இடங்களிலும் திமுகவினர் மீது இரு பிரிவுகளின் கீழ் தனித்தனியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

திமுக சார்பில் பெரியார் பிறந்த நாள் சமூகநீதி நாளாக கடைப்பிடிப்பு

சென்னை, செப். 15: பெரியார் ஈவெரா பிறந்த நாளை சமூக நீதி நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென அக்கட்சியினருக்கு திமுக சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்துதிமுகதலைமை வெளியிட்ட அறிக்கை:

பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் சமூகநீதி நாளாகக் கடைப்பிடிக்கப் படுகிறது. அவரது பிறந்த நாளை சமூகநீதி நாளாக உறுதிமொழி ஏற்க வேண்டும் என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் 2021-இல் சட்டப்பேரவையில் அறிவித்தார். அதன்படி, பெரியார் பிறந்த நாளான வியாழக்கிழமை (செப்.17) காலை 10.30 மணி அளவில், அந்தந்த மாவட்ட அலுவலகத்தில் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடத்தப்பட வேண்டும்.

வியாழக்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கருணாநிதி சிலை முன் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் தலைமைச் செயலகம் முன் போராட்டம்

சென்னை,செப்.15: நேபாள பெரு வெள்ளத்தில் சிக்கி காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் தலைமைச் செயலகம் முன் செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தினர்.

நேபாளத்தில் கடந்த ஆக. 26-ஆம் தேதி ஏற்பட்ட நிலச்சரிவு, பனிப்பாறை சரிவால் பெரும் வெள்ளத்தில் தமிழகத்திலிருந்து கைலாஷ் யாத்திரை சென்றவர்களும் சிக்கினர். 20 நாள்களாகியும், தமிழகத்தில் இருந்து சென்றவர்களில் 85 பேர் குறித்து தகவல் கிடைக்கவில்லை. குறிப்பாக, சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த மகாதேவ் கைலாஷ் யாத்திரை ஏஜென்சி மூலம் சென்ற 49 பேரை பற்றிய தகவல் தெரியவில்லை.

தலைமைச் செயலகம் முன் போராட்டம்: இந்நிலையில்குரோம்பேட்டையைச் சேர்ந்த மகாதேவ் கைலாஷ் யாத்திரை ஏஜென்சி மூலம் சென்ற 49 பேரின் குடும்பத்தினர், தலைமைச் செயலகம் முன் செவ்வாய்க்கிழமை திரண்டனர்.

அவர்கள், அங்கு 49 பேரையும் மீட்டுத் தரக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள், கோரிக்கையை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

அவர்களை அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் சமாதானப்படுத்தினர். பின்னர் அவர்களை அயலக தமிழர் நலத் துறை அமைச்சர் தென்னரசை சந்தித்துப் பேசினார். அப்போது அவர், காணாமல் போனவர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

20 நாள்களாகியும் தகவல் இல்லை: இதன் பின்னர் காணாமல் போனவர்களின் உறவினர்கள் கூறுகையில், '20 நாள்களாகியும் எங்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. மரபணு பரிசோதனை எடுத்த பிறகும் அரசு எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. எனவே, காணாமல் போனவர்களை மீட்க நேபாளத்தில் மட்டுமன்றி சீனாவிலும் தேடுதல் பணியை மேற்கொள்ள வேண்டும்' என்றனர்.

மு.க.ஸ்டாலினுக்கு எதிரான அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

சென்னை,செப்.15: ரூ.1 கோடி நஷ்டஈடு கோரி அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தாக்கல் செய்த மனுவுக்கு முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் தரப்பில் பதிலளிக்க செப்.21-ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில், அமலாக்கத்துறை வெளியிட்ட அறிக்கையை சுட்டிக்காட்டி, ரூ.258 கோடி போதைப்பொருள் கடத்தல் வழக்கில் மூளையாக செயல்பட்ட ஜான் பிரிட்டோ, பொதுப் பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவின் உறவினர் என்ற உண்மை அம்பலமாகியுள்ளதாக பதிவிட்டிருந்தார்.

அமலாக்கத்துறை குறிப்பிட்டிருந்த ஜான் பிரிட்டோ தனது உறவினர் இல்லை எனக்கூறி, ரூ. 1 கோடி மான நஷ்டஈடு கோரி மு.க.ஸ்டாலினுக்கு எதிராக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட பதிவுகளை நீக்க மு.க.ஸ்டாலின் மற்றும் திமுக தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார். இந்த மனுவுக்கு பதிலளிக்க மு.க.ஸ்டாலின் மற்றும் திமுக தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கோவிந்தராஜன் திலகவதி முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் பி.வில்சன், பதில்மனு தாக்கல் செய்ய செப்.21 வரை அவகாசம் வழங்கக் கோரினார். இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, அவகாசம் வழங்கி விசாரணையை செப்.21-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

சிறுவன் ஓட்டிய பைக் மோதி முன்னாள் அமைச்சரின் கார் ஓட்டுநர் பலத்த காயம்

சென்னை,செப்.15: சென்னை கே.கே.நகரில் சிறுவன் ஓட்டிய பைக் மோதி முன்னாள் அமைச்சரின் கார் ஓட்டுநர் பலத்த காயமடைந்தார்.

சென்னை ராமாபுரம் அருகே உள்ள அழகாபுரிநகரைச் சேர்ந்தவர் அ.முகமது ரியாஸ் (34). இவர், முன்னாள் அமைச்சரும், திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதி முன்னாள் எம்எல்ஏ-வுமான இசக்கி சுப்பையாவிடம் கார் ஓட்டுநராக பணிபுரிகிறார்.

ரியாஸ், கே.கே.நகர் சௌந்தரபாண்டியன் தெருவில் உள்ள இசக்கி சுப்பையா வீட்டின் அருகே திங்கள்கிழமை நடந்து வந்துகொண்டிருந்தார். அப்போது அங்கு சிறுவர்கள் ஓட்டி வந்த ஒரு பைக் ரியாஸ் மீது மோதியது.

விபத்தில் ரியாஸின் தலை, முதுகு பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது. ரியாஸை பொதுமக்கள் மீட்டு வடபழனியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக பாண்டி பஜார் போலீஸார் வழக்குப் பதிந்து, அந்த மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த 14 வயது சிறுவனிடமும், அவருடன் வந்த மற்றொரு சிறுவனிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமமுக, புதிய தமிழகம் கட்சிகளிடம் ஆதரவு கோரியது அதிமுக

சென்னை, செப்.15: மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளின் இடைத் தேர்தலில் அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கக் கோரி அக்கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் அமமுக, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளின் தலைவர்களை செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினர்.

அதிமுக சார்பில் மதுராந்தகம் தொகுதிக்கு கணிதாசம்பத், தாராபுரம் தொகுதிக்கு கே.பானுமதி வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவு கோரி அதிமுக தரப்பில் முன்னாள் அமைச்சர்கள் குழுவினர் பாஜக, இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி மற்றும் பாமக ஆகிய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கோரினர். அதையடுத்து செவ்வாய்க்கிழமை அதிமுக சார்பில் துணைப் பொதுச் செயலர் கே.பி.முனுசாமி, முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியன் மற்றும் நிர்வாகிகள் அக்ரி கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் புதிய தமிழகம் கட்சித் தலைவர் கே.கிருஷ்ணசாமியை சந்தித்து இடைத் தேர்தலில் அதிமுக வேட்பாளர்களை ஆதரிக்கக் கோரினர்.

அவரைத் தொடர்ந்து, அமமுக பொதுச் செயலர் டி.டி.வி.தினகரனையும் அவர்கள் சந்தித்து அதிமுக வேட்பாளர்களை ஆதரிக்கவும், பிரசாரம் மேற்கொள்ளவும் கோரினர். அப்போது அமமுக துணைப் பொதுச் செயலர் ஜி. செந்தமிழன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

மதுராந்தகம் இடைத் தேர்தலில் அதிமுக சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ.வான கனிதாசம்பத்தும், தாராபுரம் தொகுதிக்கு கே.பானுமதியும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

CHANGE OF NAME

I, Given name: **HAAMID**
Surname: **MEERLABBAI SAAD**
(Old Name)
Date of Birth: 02.04.1987
residing at Oomer House,
Oomerabad, Ambur Taluk,
Tirupattur District-635808
shall henceforth be known as
Given name: **SAAD HAAMID**
Surname: **MEERLABBAI**
(New Name)

Ambur, 15.09.2026
Given name: Haamid
Surname: Meerlabbai Saad

CHANGE OF NAME

I, Given name: **BALAJI**
Surname: **ASOKAN**
(Old Name)
S/o. Ashokan,
Date of Birth: 21.04.1984,
residing at No.408, Arcot Road,
Kathithapattarai, Vellore Taluk
and District-632012, Tamil Nadu
shall henceforth be known as
Given name: **BALAJI**
Surname: **ASHOKAN**
(New Name)

Vellore, 25.08.2026
Given name: Balaji
Surname: Asokan

அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டம், சுந்தரம்பள்ளி வட்டம் என்ற முகவரியில் வசிக்கும் **திரு. மாதேஸ்வரன் த/பெ. (லேட்) ராஜி மேஸ்திரி** என்பவரின் தந்தை **ராஜி மேஸ்திரி த/பெ. அய்யண்ண மேஸ்திரி** கடந்த 03.10.2005 ஆம் தேதி மேற்படி விலாசத்தில் இறந்ததை கால தாமத இறப்பாக பதிவு செய்யக் கோரியது தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ்விளம்பரம் கண்ட 15 **தினங்களுக்குள்** வருவாய் கோட்டாட்சியர், திருப்பத்தூர் அவர்களிடம் நேரில் எழுத்து மூலம் தெரிவிக்கலாம் தவறும்பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்
திரு. மாதேஸ்வரன்

CHANGE OF NAME

I, **Praven M,** son of Thiru Mathivanan T S, born on 10th June 2000 (District of Birth: Vellore), residing at No. 12, Madalaya Street, Vilapakkam, Arcot, Vellore- 632 521, shall henceforth be known as **PRAVIN M.** Vellore, 1st July 2026.PRAVEN M

அறிவிப்பு

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம் நந்திவேடுதாங்கல் கிராமத்தில் புதுத் தெருவில் 3/30 வீட்டில் வசிக்கும் எனது கட்சிக்காரர் **திரு. C. விஸ்வநாதன் த/பெ. லேட் செங்கல்வராயன்** என்பவர் அவரது தகப்பனார் லேட் செங்கல்வராயன் என்பவருக்குச் சொந்தமான **ஆவண எண். 4945/2016** ஆவணத்தை தனது வீட்டை மாற்றி அமைக்கும்போது நந்திவேடுதாங்கல் கிராமத்தில் தொலைத்துவிட்டார். இது தொடர்பாக அரக்கோணம் வட்ட காவல் நிலையத்தில் **LDR No. ID9392612517**-ன்படி புகார் அளித்துள்ளார். மேற்படி ஆவணம் யாருக்காவது கிடைத்தால் கீழ்கண்ட முகவரியிலோ அல்லது அரக்கோணம் வட்ட காவல் நிலையத்திலோ தெரியப் படுத்தவும்.

S. RAMESH, B.L.,
Advocate & Commissioner of Oaths,
No. H-78, TNHB New Colony, Jothi Nagar Post,
Arakkonam-631003. Ranipet District.
Cell: 9171111741

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

இந்து சமய அறநிலையத்துறை

இணையவழி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தவகை. LUMPSUM

மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 07/26-27/நாள் 15.09.2026

வேலூர் மாவட்டம் (ம) வட்டம், அருள்மிகு சின்னி இராமசாமி அறக்கட்டளை, செயல் அலுவலர் கீழ்காணும் பணிக்கு தமிழ்நாடு அரசுத்துறை / அரசு நிறுவனங்களில் பதிவுபெற்ற, நடப்பில் உள்ள. தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் / தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (http://tntenders.gov.in) – மூலம் மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வேலையின் பெயர்	வேலூர் மாவட்டம் (ம) வட்டம், அருள்மிகு சின்னி இராமசாமி அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்தில் ஒருங்கிணைந்த இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகம் கட்டுதல் பணியில் கூடுதல் பணிகளான, பாதுகாவலர் அறை. சுற்று சுவர் கட்டும் பணி, பாவு தளம், அணுகு சாலை மற்றும் வாகன நிறுத்துமிடம், டீசல் ஜெனரெட்டர் ஆகிய கூடுதல் பணிகள்
பணியின் தோராய மதிப்பு (ரூ).	60.40 இலட்சம்
முன்வைப்புத் தொகை (ரூ).	40200/–
பணி முடிக்க வேண்டிய காலம்	4 மாதங்கள்
முன் வைப்புத்தொகை செலுத்தப்பட வேண்டிய விவரம் : இணைய வழியில் மட்டுமே செலுத்த வேண்டும்.	

முக்கிய நாட்கள்:

(1) இணைய வழியில் இலவசமாக ஒப்பந்தப்புள்ளிகளை தரவிறக்கம் செய்ய **: 18.09.2026** முதல் **06.10.2026** மாலை **5.00** மணி வரை.

2) இணைய வழியில் ஒப்பந்தப் புள்ளிகளை தரவேற்றம் செய்ய: **07.10.2026** பிற்பகல் **01.00** மணி வரை.

(3) இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கும் நாள் மற்றும் நேரம் : **07.10.2026** பிற்பகல் **3.00** மணி முக்கிய விவரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் **(http://tntenders.gov.in)** என்ற இணையதளத்தில் மட்டுமே பெறவேண்டும், செய்தித்தாளில் வெளியிடப்படாது.

ஒப்பம்/- செயல் அலுவலர்
இந்து சமய அறநிலையத்துறை,
வேலூர்.

வெ.ஆ.எண்: 56/செமதொ.அ/வேலூர்/2026, நாள்: 15.09.2026

பஞ்சாப் நேஷனல் வங்கி
...the name you can BANK upon !

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49,
ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.
தொலைபேசி: 044-28112261-90, மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002ன் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 (6) மற்றும் 9 (1) ன் கீழ் அசையாச் சொத்திற்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் 8 (6) & 9(1) ன் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் **06.10.2026** அன்று மின் ஏல விற்பனை செய்யப்படும், என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி : கடன்தாரர்: 1) M/s.நாசர் இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், கதவு எண்.408 மற்றும் 409, மலையாளம் அப்துல் குத்தூஸ் சாஹிப் தெரு, வாணியம்பாடி நகரம், வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம், அஞ்சல் - 635 751. **கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரர்கள் : 1) திருமதி.சுமையா ஜமால்,** கதவு எண்.408 மற்றும் 409, மலையாளம் அப்துல் குத்தூஸ் சாஹிப் தெரு, வாணியம்பாடி நகரம், வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம், அஞ்சல் - 635 751. **2) திரு.நாசர் அகமது ஜமால்,** கதவு எண்.408 மற்றும் 409, மலையாளம் அப்துல் குத்தூஸ் சாஹிப் தெரு, வாணியம்பாடி நகரம், வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம், அஞ்சல் - 635 751.

நிலுவைத் தொகை : ரூ.40,87,37,935.30 (ரூபாய் நாற்பது கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து முப்பத்து ஏழு ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்து மற்றும் பைசா முப்பது மட்டும்) **மேலும் 30.06.2026 அன்று முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். 19.03.2021; அன்று கோரிக்கை அறிவிப்பு U/S 13(2) அளிக்கப்பட்டது: 02-07-2021 அன்று அடையாள சுவாதீன அறிவிப்பு U/S 13(4) அளிக்கப்பட்டது:**

அடமான சொத்துக்களின் விவரங்கள்:

1) a) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூர்பேட்டை நகர் மதுரா கோட்டை, வாணியம்பாடி நகராட்சி நகர், T.சர்வே எண்.46, பிளாக் எண்.46, வார்டு -D, பழைய T.சர்வே எண்கள்.527 & 528 இல் அடங்கிய வாணியம்பாடி - 635751, கோட்டை, மலையாளம் அப்துல் குத்தூஸ் சாஹிப் தெரு, கதவு எண்.408 இல் அமைந்துள்ள **திருமதி. சுமையா ஜமால் மற்றும் திரு முகமது ஜமால் அப்துல் வாஹித்** ஆகியோரின் உரிமைபெற்ற சொத்தின் பரப்பளவு **2424 ச.அடி** நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: T.சர்வே எண்.20, திரு. சதுல்லா சாஹிப் அவர்களின் உரிமைப்பெற்ற வீடு, தெற்கில்: மலையாளம் அப்துல் குத்தூஸ் சாஹிப் தெரு, கிழக்கில்: T.சர்வே எண்.45/1, திருமதி. சுமையா ஜமால் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து மற்றும் மேற்கில்: T.சர்வே எண்.47, திருமதி. மெஹருன்னிஷா பீ அவர்களின் உரிமைப்பெற்ற வீடு. **b)** வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூர்பேட்டை நகர் மதுரா கோட்டை, வாணியம்பாடி நகராட்சி நகர், T.சர்வே எண்.45/1, பிளாக் எண்.46, வார்டு -D இல் அடங்கிய வாணியம்பாடி - 635751, கோட்டை, மலையாளம் அப்துல் குத்தூஸ் சாஹிப் தெரு, கதவு எண்.409 இல் உள்ள **திருமதி. சுமையா ஜமால் மற்றும் திரு முகமது ஜமால் அப்துல் வாஹித்** ஆகியோரின் உரிமைபெற்ற சொத்தின் பரப்பளவு **775 ச.அடி** நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: T.சர்வே எண்.21, திரு. ஹாஜி அப்துல் சமது அவர்களின் உரிமைப்பெற்ற வீடு, தெற்கில்:மலையாளம் அப்துல் குத்தூஸ் சாஹிப் தெரு, கிழக்கில்: திரு.S.அப்துல் ரெஹ்மான் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து மற்றும் மேற்கில்: T.சர்வே எண்.46, **Latitude, Longitude and Coordinates: 12.679972N, 78.612750E (Baanknet Property ID No.PUNBABA40363897)**

ரிசர்வ் தொகை: ₹ 1,27,98,000/- டெபாசிட் செய்ய வேண்டிய தொகை (EMD): ₹ 12,79,800 /- உயர்வு தொகை: ₹ 1,00,000/-

2) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூர்பேட்டை நகர் நிமுதாக நஜீது பட்டறை, வாணியம்பாடி நகராட்சி நகர், பழைய மிட்டா சர்வே எண். 346,347 & 350, ஆற்றோரம் புன்செய் B/2 பாகம், வார்டு - 2, செட்டில்மென்டின்படி B/2 பாகம், வார்டு -2, பழைய T.சர்வே எண்.11, 12 & 16, செட்டில்மென்டின்படி புதிய வார்டு - E, பிளாக் - I, T. சர்வே எண்.6/2, துணைப்பிரிவின்படி புதிய T.சர்வே எண்.6/2B2 இல் அமைந்துள்ள திருமதி. சுமையா ஜமால் அவர்களின் பெயரில் அமைந்துள்ள அசையாச் சொத்தின் பரப்பளவு 50சென்ட்கள் விஸ்தீரணம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: 25அடி புதிய சாலை, தெற்கில்: திரு. S.T. அஹ்மத் பாஷா சாஹிப் அவர்களின் Wet நிலம் மற்றும் திரு. T.K.அப்துல் ரஷீத் சாஹிப் அவர்களின் Wet நிலம், கிழக்கில்: 25அடி புதிய சாலை, மேற்கில்: திரு. A.S. அப்துல் ரஹீம் சாஹிப் அவர்களின் Wet நிலம். **Latitude, Longitude and Coordinates:12.41"13.1"N 78.37,29.2"E 12.686972, 78.624778 (Baanknet Property ID No.PUNBABA40363897Y)**

ரிசர்வ் தொகை: ₹ 1,23,12,000/- டெபாசிட் செய்ய வேண்டிய தொகை (EMD): ₹ 12,31,200/- உயர்வு தொகை: ₹ 1,00,000/-

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: ஏதுமில்லை.

மின் ஏல விற்பனை நடைபெறும் தேதி 06-10-2026 , நேரம்: காலை 11 முதல் மாலை 5 மணி வரை

EMD செலுத்த கடைசி தேதி 05-10-2026 நேரம்: மாலை 5.00 மணி வரை	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல் : 29-09-2026

தொடர்புக்கு: திரு.B.வர பிரசாத் - முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, தொலைபேசி எண்: 8884822944
திரு. பிரயாக் ராஜ் சாஹு - சட்ட அதிகாரி , தொலைபேசி எண்: 7477057944

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). **"எங்கு உள்ளதோ உள்ள நிலையில்"** மற்றும் **"என்ன உள்ளதோ உள்ள நிலையில்"** மற்றும் **"என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்"** என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவலுக்குக் கூறப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் **06.10.2026** அன்று காலை **11.00** மணி முதல் மாலை **05.00** மணி வரை **https://www.baanknet.com** என்ற இணையதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.baanknet.com & www.pnbindia.in** ஆகிய இணையதளங்களில் காணலாம்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 15.09.2026
இடம் : சென்னை

முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

Mr. சாந்திலால் சுரானாவின் திவால்நிலை அறங்காவலர்
எண்.397, பிரிசிஷன் பிளாசா, எண்.23, IIவது தளம், அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018

விற்பனை அறிவிப்பு

மேற்படி IA/IBC/1609/CHE/2025 in CP/IB/204/CHE/2021-ல் 27.11.2025 அன்று NCLT சென்னை, அமர்வு உத்தரவின்படி வழங்கப்பட்ட பொதுவான உத்தரவுகளுக்கு இணங்க கீழே கையொப்பமிட்டுள்ள திவால்நிலை அறங்காவலர் அவர்கள், **திரு. சாந்திலால் சுரானா, முகவரி: S.U.S. பவன், 23/13-A, பண்டபம் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010** என்பவருக்கு சொந்தமான கீழே அட்டவணையில் தொகுதி I (ஜட்டம் 1, 2 & 3) மற்றும் தொகுதி II விவரிக்கப்பட்டுள்ள நிலத்தினை வாங்குவதற்கு ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் வரவேற்கப்படுகிறது. **"சொத்துக்கள் உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளவாறு" மற்றும் "புகார்கள் ஏற்கப்படமாட்டாது"** எனும் அடிப்படையில் சொத்துக்கள் "திவால்நிலை மற்றும் நொடிப்புநிலை சட்டம், 2016" மற்றும் "IBBI (நிறுவனக் கடனாளிகளுக்கான தனிநபர் உத்தரவாததாரர்களின் திவால்நிலை நடைமுறை) -ன் கீழ் விற்பனை செய்யப்படும்.

விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்துக்களை பார்வையிடும் தேதி/நேரம்: 24.09.2026 காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

EMD உடன் விலைக்குறிப்பீடுகளை ஆன்லைன் மூலமாக சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 14.10.2026 அன்றோ அதற்கு முன்னரோ மாலை 5.00 மணிக்குள்

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 16.10.2026
காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
ஒவ்வொரு முறையும் ஏலம் எடுக்கப்படும் போது ஏலத்தின் இறுதி நேரம் 15 நிமிடங்கள் நீட்டிக்கப்படும் மின் ஏலத்தின் கடைசி 5 நிமிடங்கள்

சொத்துக்கள் விவரம்

தொகுதி 1: ஜட்டம் 1: அரக்கோணம் பதிவு மாவட்டம் மற்றும் சோளிங்கர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.5/2 - 52 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.21.0, 10/2 - 67 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.27.0, 11/5 - 7 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.03.0, 11/6 - 23 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.09.5, 12/10 - 27 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.11.0, 12/11 - 45 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.18.0, **அரியூர் கிராமம், அரக்கோணம் தாலுகா, ராணிப்பேட்டை மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 2.21 ஏக்கர் நிலம்** மற்றும் அதிலுள்ள கிணறு, 5HP மோட்டார் பம்ப்செட், EB கனெக்ஷன் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். சோளிங்கர் சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண்.3095/2007-ஆகப் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்திற்கு உட்பட்டது.

ஜட்டம் 2: அரக்கோணம் பதிவு மாவட்டம் மற்றும் சோளிங்கர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.6/2 (பகுதி), **அரியூர் கிராமம், அரக்கோணம் தாலுகா, ராணிப்பேட்டை மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 114 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.46.125 அல்லது 1.14 ஏக்கர் நிலம்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். சோளிங்கர் சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண்.763/2008-ஆகப் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்திற்கு உட்பட்டது.

ஜட்டம் 3: அரக்கோணம் பதிவு மாவட்டம் மற்றும் சோளிங்கர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட **சர்வே எண்.3/3J - 20 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.08.0, 12/7 - 51 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.20.5, அரியூர் கிராமம், அரக்கோணம் தாலுகா, ராணிப்பேட்டை மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 0.71 ஏக்கர் நிலம்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். சோளிங்கர் சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண்.1477/2008-ஆகப் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்திற்கு உட்பட்டது.

தொகுதி I (ஜட்டம் 1,2&3) குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 60,90,000/- EMD (குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%) **₹ 6,09,000/-**

தொகுதி II: திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் R.K.பேட்டை சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட **சர்வே எண்.249/2B2, ஸ்ரீ காளிகாபுரம் கிராமம், பள்ளிப்பட்டு தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 13.75 செண்ட் நிலம்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். R.K.பேட்டை சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண் 688/2002 -ஆகப் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்திற்கு உட்பட்டது.

தொகுதி II குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 11,96,250/- EMD (குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%) **₹ 1,19,625/-**

ஏல உயர்வு கோரும் தொகை : தொகுப்பு I (ஜட்டம் 1 to 3) : ₹ 50,000/- அல்லது அதன் மடங்குகளில்
தொகுப்பு II : ₹ 25,000/- அல்லது அதன் மடங்குகளில்

EMD செலுத்தும் முறை: குறைந்தபட்ச கேட்பு விலையின் 10% டெபாசித் தொகையை NEFT / RTGS / IMPS பரிமாற்றத்தின் மூலம் **"Transfer in favour of Account - Shantilal Surana "in Bankruptcy Process "Account No.5910857432 with Central Bank of India, Addison Buildings Branch, Chennai – 600 002. IFSC Code CBIN0280878** என்ற கணக்கில் வங்கியில் டெபாசிட் செய்ய வேண்டும். செலுத்தும் விவரங்களை தெளிவாக விலைக்குறிப்பீட்டு படிவத்தில் தெரிவிக்க வேண்டும். EMD-க்கு காசோலைகள்/டிமாண்ட் டிராஃப்ட்கள் ஏற்கப்படமாட்டாது.

குறிப்பு: ஏலத்தில் கலந்துகொள்ளும் ஏலதாரர்கள் ஒவ்வொரு தொகுப்பிற்கும் தனித்தனியாக ஏலத்தை சமர்ப்பிக்க வேண்டும். அதற்காக சேவை வழங்குநரால் தனித்தனியாக மின் ஏல ஐடி வழங்கப்படும்.

விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு
https://indiaeauction.com பார்வையிடலாம்.

இடம்: சென்னை
தேதி: **16.09.2026**

V.துரைசாமி, திவால்நிலை அறங்காவலர், **Mob: 99620 59300**
IBBI/IPA-002/IP-N00609/2018-19/11862

Mr. விஜயராஜ் சுரானாவின் திவால்நிலை அறங்காவலர்
எண்.397, பிரிசிஷன் பிளாசா, எண்.23, IIவது தளம், அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018

விற்பனை அறிவிப்பு

மேற்படி IA/IBC/1591/CHE/2025 in CP/IB/221/CHE/2021-ல் 16.12.2025 அன்று NCLT சென்னை, அமர்வு உத்தரவின்படி வழங்கப்பட்ட பொதுவான உத்தரவுகளுக்கு இணங்க கீழே கையொப்பமிட்டுள்ள திவால்நிலை அறங்காவலர் அவர்கள், **திரு. விஜயராஜ் சுரானா, முகவரி: எண்.12, கோல்டன் ஹோம்ஸ்டெட் அப்பார்ட்மெண்ட்ஸ், 4வது தளம், 6, ஹாரிங்டன் ரோடு, 7வது அவின்யூ, சேத்துப்பட்டு, சென்னை-600 031** என்பவருக்கு சொந்தமான கீழே அட்டவணையில் தொகுதி I (ஜட்டம் 1 & 2) விவரிக்கப்பட்டுள்ள நிலத்தினை வாங்குவதற்கு ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் வரவேற்கப்படுகிறது. **"சொத்துக்கள் உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளவாறு" மற்றும் "புகார்கள் ஏற்கப்படமாட்டாது"** எனும் அடிப்படையில் சொத்துக்கள் "திவால்நிலை மற்றும் நொடிப்புநிலை சட்டம், 2016" மற்றும் "IBBI (நிறுவனக் கடனாளிகளுக்கான தனிநபர் உத்தரவாததாரர்களின் திவால்நிலை நடைமுறை) -ன் கீழ் விற்பனை செய்யப்படும்.

விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்துக்களை பார்வையிடும் தேதி/நேரம்: 24.09.2026 காலை 11.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை

EMD உடன் விலைக்குறிப்பீடுகளை ஆன்லைன் மூலமாக சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம் 14.10.2026 அன்றோ அதற்கு முன்னரோ மாலை 5.00 மணிக்குள்

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 16.10.2026
காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
ஒவ்வொரு முறையும் ஏலம் எடுக்கப்படும் போது ஏலத்தின் இறுதி நேரம் 15 நிமிடங்கள் நீட்டிக்கப்படும் மின் ஏலத்தின் கடைசி 5 நிமிடங்கள்

சொத்துக்கள் விவரம்

தொகுதி I: ஜட்டம் 1: அரக்கோணம் பதிவு மாவட்டம் மற்றும் சோளிங்கர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.6/2 (பகுதி), 114 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.46.125 **அரியூர் கிராமம், அரக்கோணம் தாலுகா, ராணிப்பேட்டை மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 1.14 ஏக்கர் நிலம்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். சோளிங்கர் சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண் 764/2008-ஆகப் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்திற்கு உட்பட்டது.

ஜட்டம் 2: அரக்கோணம் பதிவு மாவட்டம் மற்றும் சோளிங்கர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.12/12 - 17 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.07.0, 12/13 - 9 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.03.5, 12/14- 27 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.11.0, 12/15 - 23 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.09.5, 12/16 - 21 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.08.5, 12/17 - 18 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.07.5, 12/18 - 21 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.08.5, 12/19 - 23 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.095, 12/20 - 21 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.085, 12/21 - 21 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.08.5, 15/3 - 4 செண்ட் அல்லது ஹெக்டேர் 0.01.5, **அரியூர் கிராமம், அரக்கோணம் தாலுகா, ராணிப்பேட்டை மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 2.05 ஏக்கர் நிலம்** மற்றும் அதிலுள்ள கிணறு, 5HP மோட்டார் பம்ப்செட், EB கனெக்ஷன் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். சோளிங்கர் சார் பதிவு அலுவலகத்தில் ஆவண எண்.3096/2007-ஆகப் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்திற்கு உட்பட்டது.

தொகுதி I (ஜட்டம் 1 & 2) குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 48,21,000/- EMD (குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%) **₹ 4,82,100/-**

ஏல உயர்வு கோரும் தொகை (ஜட்டம் 1 & 2) **: ₹ 50,000/-** அல்லது அதன் மடங்குகளில்

EMD செலுத்தும் முறை: குறைந்தபட்ச கேட்பு விலையின் 10% டெபாசித் தொகையை NEFT / RTGS / IMPS பரிமாற்றத்தின் மூலம் **"Transfer in favour of Account -. Vijayraj Surana"In Bankruptcy Process"Account No.5936726624with Central Bank of India, Addison Buildings Branch, Chennai – 600 002. IFSC Code CBIN0280878.** என்ற கணக்கில் வங்கியில் டெபாசிட் செய்ய வேண்டும். செலுத்தும் விவரங்களை தெளிவாக விலைக்குறிப்பீட்டு படிவத்தில் தெரிவிக்க வேண்டும். EMD-க்கு காசோலைகள்/டிமாண்ட் டிராஃப்ட்கள் ஏற்கப்படமாட்டாது.

விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு
https://indiaeauction.com பார்வையிடலாம்.

இடம்: சென்னை
தேதி: **16.09.2026**

V.துரைசாமி, திவால்நிலை அறங்காவலர், **Mob: 99620 59300**
IBBI/IPA-002/IP-N00609/2018-19/11862